1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இதற்கு தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் தருகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவமனைகளிலே சித்த வைத்தியத்திற்கென்று தனிப் பிரிவு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப்போல ஹோமியோபதி மருத்துவத்திற்கும் தனிப் பிரிவுகளை ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அதைத் தனிப்பிரிவாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையிலேதான் திண்டுக்கல்லிலும், சேலத்திலும் இந்த மருத்துவமனைகள் துவங்கப் பட்டிருக்கிறது. அதைப்போல தொடர்ந்து பல இடங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமேஸ்வரம் மருத்துவமனை

*வினா எண் 20— திரு. கா. செங்கோடன்; திரு. க. இராமசாமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமேஸ்வரம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

தற்போது அறுவை சிகிச்சை செய்ய ஒரு சிறிய அறை உள்ளது. அதை விரிவு படுத்தும் செயற்குறிப்பு இப்போது இல்லை.

திரு. கா. செங்கோடன் : தலைவரவர்களே, இராமேஸ்வரம் ஒரு தீவு. இரயில் போக்குவரத்து அங்கே குறிப்பிட்ட காலத்திலே தான் போய் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்றால் அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்குத்தான் வரவேண்டி இருக்கிறது. அவ்வாறு வருவது சிரமம். ஆகவே அரசு அதைக் கருத்திலே கொண்டு உடனடியாக அறுவை சிகிச்சைப் பிரிவை அங்கே ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தற்போது இராமேஸ்வரத்தில் இருக்கும் மருத்துவமனையில் ஒரு சிறிய அறுவை சிகிச்சை அரங்கம் இருக்கிறது. அங்கே அத்தியாவசிய அவசரமான அறுவை சிகிச்சைகள் செய்யப்

படுகின்றன. ஆனால் மிகப்பெரிய அறுவை சிகிச்சைகள் அங்கே செய்ய இயலாது. ஆகவே அங்கே ஒரு பெரிய அறுவை சிகிச்சைக் கூடத்தை நிறுவ வேண்டுமென்ற செயற்குறிப்பை 1980-81-ம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் அங்கே இருக்கின்ற மாவட்ட மருத்துவ மனை அதிகாரிகள் அனுப்பி இருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி : தலைவரவர்களே, இராமேஸ்வரத்தில் ஒரு மேஜர் ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்றால் இராமநாத புரத்திற்குத்தான் எடுத்துச் செல்லவேண்டி இருக்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரத்திற்குச் செல்வ தென்றால் சுமார் 38 மைல்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே இருக்கின்ற மைனர் ஆப்பரேஷன் செய்யும் சிறு பிரிவை அமைச்சர வர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒரு அவசரமும் முக்கியத்துவமும் கொண்ட பிரச்சினையாக இருப்பதால் உடனடியாக அங்கே ஒரு மேஜர் ஆப்பரேஷன் தியேட்டர் உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, அதிகமான டாக்டர்களையும் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு அமைச்சரவர் களுடைய பதிலையும் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர வர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இராமேஸ்வரம் சுற்றுப்புறம் எல்லாம் சேர்ந்து கிட்டதட்ட ஒரு இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய ஒரு பெரிய தீவு ஆகும். அந்தத் தீவிலே இருந்து அறுவை சிகிச்சைக்காக 40 மைல் தூரத்தில் இருக்கின்ற இராமநாதபுரத்திற்கு வரவேண்டி இருக்கிறது. ஆகவே ஏற்கனவே அங்கே ஒரு பெரிய ஆஸ்பத்திரி அமைக்கும் செயற்குறிப்பு இருந்தும் கூட அது இன்று வரைக்கும் அமல் நடத்தப்படவில்லை. ஆகவே அங்கே தேவையான ஒரு அறுவை சிகிச்சை நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.